தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2042, ஆவணி 20

2011 செப்டம்பர் 6, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. டி. ஜெயக்குமார்** *அவர்கள் தலைமையில் முற்பகல் 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து."

ஆரோக்கியம், செல்வம், நல்ல விளைச்சல், இன்ப வாழ்வு, நல்ல காவல் ஆகிய இந்த ஐந்தும் நாட்டிற்கு அழகு என்று கூறுவர்.

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

1. தகவல் கோரல்

(அ) திருப்பூர் மாவட்டம், விசைத்தறித் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2011-2012 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, மைக்கை ஆன் பண்ணுங்கள்.*

***திரு. அ. சவுந்தரராசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசைத்தறித் தொழிலாளர்கள் கோவை, திருப்பூர் மாவட்டங்களில் தொடர்ந்து போராடிக்கொண்டிருக்கிறார்கள். அது குறித்து வேகமாக, விரைவாக நடவடிக்கை எடுத்து, அந்தத் தொழிலாளர்கள் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சவுந்தரராசன் அவர்கள், இன்றைக்குதான் அதுகுறித்து கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். அது என்னுடைய ஆய்வில் இருக்கின்றது. துறையினுடைய பதில் வந்த பிறகு எடுத்துக்கொள்ளப்படுவதற்குப் பரிசீலனை செய்யப்படும். மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.*

செல்வி கே. பாலபாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசைத்தறித் தொழிலாளர்கள் கடந்த 8 நாட்களாக போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதே* issue *தானே?*

செல்வி கே. பாலபாரதி: *வேலைநிறுத்தம் செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய பிரச்சினை சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வந்ததா?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இன்றைக்குதான்* notice *கொடுத்திருக்கிறீர்கள். அது என்னுடைய ஆய்வில் உள்ளது.*

செல்வி கே. பாலபாரதி: *8 நாட்களாக* strike *நடக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிலே துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள்* notice *கொடுத்திருக்கிறீர்கள். அது என்னுடைய ஆய்வில் உள்ளது.*

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அரசாங்கம், இந்தியாவில் இருக்கக்கூடிய பஞ்சாலைகள் சம்பந்தமாக பங்களாதேஷ் நாட்டுடன் 22 பொருட்களை இறக்குமதி செய்வதற்கான ஒரு ஒப்பந்தம் இன்றையதினம் ஏற்பட இருக்கின்றது. இதனால் தமிழகத்தில் இருக்கக்கூடிய பஞ்சாலைகள் கடுமையான நெருக்கடிக்கும், சிக்கலுக்கும் உள்ளாக்கப்படும். கிட்டத்தட்ட 4 இலட்சம் தொழிலாளர்களுக்கு வேலை இழப்பு ஏற்படும். இது சம்பந்தமாக விவாதிக்க . . .*

2011 செப்டம்பர் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள், இன்றைக்குதான் என்னுடைய அறைக்கு வந்து அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். அது என்னுடைய ஆய்வில் உள்ளது. தயவுசெய்து அமருங்கள்.*

(அ) திருப்பூர் மாவட்டம், விசைத்தறித் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.*

டாக்டர் க. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசைத்தறித் தொழிலாளர்களினுடைய போராட்டம் குறித்து, ஏற்கெனவே நான் நேற்றே அறிவிப்பு கொடுத்துவிட்டேன். நேற்றே உங்களிடம் அறிவிப்பு கொடுத்துவிட்டேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. சவுந்தரராசன் அவர்களுக்கு சொன்ன பதில் உங்களுக்கும் பொருந்தும். தயவுசெய்து அமருங்கள்.*

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துக்குமரன் அவர்கள்.*

திரு. எஸ்.பி. முத்துக்குமரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மதியம் சுமார் 1-30 மணியளவில் மணப்பாறை அருகே ஏற்பட்ட விபத்து குறித்து கவன ஈர்ப்பு கொடுத்திருக்கிறோம். அதனை எடுத்துக்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இன்றைக்குதான் என்னுடைய அறைக்கு வந்து அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். துறையினுடைய பதில் வந்தவுடன் அவையில் எடுத்துக்கொள்ளப்படுவதற்குப் பரிசீலனை செய்யப்படும். (குறுக்கீடு)* Reply *வரட்டும்.*

திரு. ம. கலை அரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிகொண்டான்* Toll gate *இல், ஏற்கெனவே நான் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கின்றேன்.*